மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 71/2023

பெயர் – லிங்கதுரை(வா.சா.1)

நாள் – 19.06.2024

பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

எனக்கு சொந்த ஊர் நத்தத்துப்பட்டி கிராமம் என்றால் சரிதான். எனக்கு நன்றாக எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். நான் இரணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். எனது தந்தையார் பெயர் பாலகிருஷ்ணன் என்றால் சரிதான். எனது தாயார் பெயர் கோட்டிமுத்தம்மாள் ஆகும். என்னுடன் பிறந்தவர்கள் இரண்டு மூத்த சகோதரிகள் ஆகும். எனது மூத்த சகோதரிகளின் பெயர் பெருமாளம்மாள், சீத்தாலட்சுமி என்றால் சரிதான். இந்த வழக்கிற்கான விபரங்கள் அனைத்தையும் வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். பிராதில் தபசில் சொத்து விபரத்தில் சர்வே எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் சொத்திற்கான சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.548 என்று நினைக்கிறேன். தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிப்பதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆன அசல் வழக்கு எண்.78/1999 க்கான தீர்ப்புரையில் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். அது பூர்வீக இடம் என்பதால் இல்லை. பட்டா மற்றும் வீட்டு ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து இரண்டு பாகமாக உள்ள ஓட்டு வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த ஓட்டு வீட்டில் கிழக்கு பக்கம் வாசல் வைத்த வீடு எனது சகோதரி சீத்தாலட்சுமிக்கும், மேற்கு பக்கமாக வாசல் வைத்த வீடே அங்கு இல்லை. அதில் ஒரு வீட்டிற்கான பழைய கதவு எண்.1/40A1 என்றும், மற்றொரு வீட்டிற்கான பழைய எண்.1/40A2 என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் தங்கசாமி மனைவி பெருமாளம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் 26.08.1999 ம் வருட தானசெட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். அவ்வாறாக எனது தாயார் எனது சகோதரி பெருமாளம்மாள் பெயருக்கு எழுதி கொடுத்த அந்த தானசெட்டில்மெண்ட்

ஆவணம் தான் தவறு என்று தான் நான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். என் பெயரில் தான் அனைத்து ஆவணங்களும் உள்ளது. அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆகும். பெருமாளம்மாள் பெயரில் உள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணம் பிறப்பிக்கப்பட்ட அதே தேதியில் எனது தாயார் எனது மற்றொரு சகோதரியான சீத்தாலட்சுமி பெயருக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சீத்தாலட்சுமி பெயரில் எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்திற்கான கதவு எண்.1/40A2 என்றாலும் அது தான் இந்த வழக்கின் தாவா சொத்து என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கான கதவு எண்.1/40A1 ஆகும். தாவா சொத்திற்கான கதவு எண்.1/40A2 க்கு தாக்கல் செய்திருந்தால் அது தவறு என்றாலும், அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. தாவா வழக்கு சொத்து விபரத்தில் காட்டப்பட்டுள்ள கதவு எண்.1/40A2 ல் காட்டப்பட்டுள்ள சொத்தை எனது சகோதரி சீத்தாலட்சுமி அவரது மகன் பாலகிருஷ்ணனுக்கு 21.04.2005 ம் தேதி ஒரு தானசெட்டில்மெண்ட் மூலம் எழுதி கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு வந்த பிறகு தான் தெரிந்து கொண்டேன். அன்றைய தேதியிலிருந்து இன்றைய தேதி வரை கதவு எண்.1/40A2 பாலகிருஷ்ணன் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. கதவு எண்.1/40A1 தான் பாலகிருஷ்ணன் பெயரில் உள்ளது. அந்த சொத்தை தான் நான் பாலகிருஷ்ணனுக்கு வாடகைக்கு தான் பேசி விட்டேன். கதவு எண்.1/40A2 எனது சகோதரி மகன் பாலகிருஷ்ணன் பெயரில் இருப்பது எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்காக நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டா, தீர்ப்பாணை, வீட்டு ரசீதுகள், தாக்கல் செய்துள்ளேன். சாட்சி தானாகவே தபசில் சொத்திற்கான சர்வே எண்.548 என்று முன்பு தவறாக சொல்லிவிட்டதாகவும், சரியான சர்வே எண்.528/4 என்றும் சாட்சியம் அளிக்கிறார். என்னிடம் காண்பிக்கப்படும் 2023–2024 க்கான வீட்டு வரிரசீது 26.06.2023 ல் எனது சகோதரி சீத்தாலட்சுமி பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதே வருடத்திற்கான வீட்டு வரிரசீது என்னிடமும் உள்ளது. 2023–2024 ம் வருடத்திற்கான வீட்டு வரிரசீதும் உள்ளது. கடந்த 2001 லிருந்து 2023 வரை தாவா சொத்திற்கான

தீர்வை ரசீது சீத்தாலட்சுமி பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. அது எனது பெயரில் தான் உள்ளது. கடந்த 2001 லிருந்து 2023 வரை தாவா சொத்திற்கான தீர்வை ரசீது சீத்தாலட்சுமி பெயரில் தான் உள்ளது என்று நத்தத்துப்பட்டி ஊராட்சி பஞ்சாயத்து தலைவரை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். நான் விசாரித்தாலும் எனது பெயரில் உள்ளதும் தெரியவரும். என்னிடம் காண்பிக்கப்படும் வில்லங்கச்சான்று சர்வே எண்.528/4 க்கானது என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.2 ஆகும். அது 20.12.2023 ம் தேதி எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வில்லங்கச்சான்றிதழில் 14 வது சொத்தில் தாயார் கோட்டிமுத்தம்மாள் சகோதரி சீத்தாலட்சுமிக்கு எழுதி கொடுத்தாக தான் உள்ளது என்றால் பத்திரம் எழுதி கொடுத்தால் வில்லங்கச்சான்றிதழில் அவ்வாறு தான் வரும். அதே வில்லங்கச்சான்றிதழில் 19 வது சொத்து விபரத்தில் எனது சகோதரி சீத்தாலட்சுமி அவரது மகன் பாலகிருஷ்ணனுக்கு எழுதி கொடுத்த விபரம் தெரிய வருகிறது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணமான வில்லங்கச்சான்றிதழில் சர்வே எண்.528/4 எனது பெயரில் உள்ளதாக எங்காவது காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பத்திரம் எழுதி கொடுத்தன் பேரில் தான் வில்லங்கச்சான்றிதழில் வரும். அந்த பத்திரம் எழுதி கொடுத்திருக்ககூடாது அதனால் தான் நீதிமன்றத்திற்கு வந்தேன். எனது சகோதரி பெருமாளம்மாளுக்கு பாத்தியப்பட்ட வீட்டிற்கான தீர்வை ரசீது தான் என் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. இரண்டு வீடுகளுக்குமே என் பெயரில் தான் தீர்வை ரசீது உள்ளது. இரண்டு வீடுகளும் என் பெயரில் இல்லை என்றாலும், பெருமாளம்மாள் பெயருக்குள்ள கதவு எண்.1/40A1 சொத்து என் பெயரிலும், சீத்தாலட்சுமி பெயருக்குள்ள கதவு எண்.1/40A2 சொத்து சீத்தாலட்சுமி பெயரிலும் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியமே இல்லாத சொத்தை பிரதிவாதிக்கு வாடகைக்கு விட்டதாக நான் சொல்லுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2022 ம் வருடம் ஏப்ரல் மாதம் களியக்காவிளை வைத்திய சாலையில் சிகிச்சை எடுத்து கொண்டிருந்தேன், நான் ஏப்ரல் இறுதியில் ஊருக்கு வந்துவிட்டேன், அப்போது பிரதிவாதி என்னிடம் வந்து வாடகைக்கு கேட்டதால் கதவு எண்.1/40A1 சொத்தை முன்பணம் பெறாமல் ரூ.500/–க்கு நான் வாடகைக்கு கொடுத்தேன். முன்பணம் பெறாமல் வாடகைக்கு விடும் வழக்கம் நடைமுறையில் இல்லை என்றால் கிராமத்தில் முன்பணம் வாங்குவது நடைமுறையில் சாத்தியமில்லை.

கதவு எண்.1/40A1ல் பிரதிவாதி குடியிருக்கவோ இல்லை என்றாலும், என்னிடம் வாடகைக்கு பேசவில்லை என்றாலும் சரியல்ல. எனது சகோதரி சீத்தாலட்சுமி மற்றும் பெருமாளம்மாளுக்கு எனது தாயார் எழுதி கொடுத்த சொத்துக்களை பெருமாளம்மாளிடமிருந்து அபகரித்து கொண்டு சீத்தாலட்சுமியிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய சொத்துக்களை தான் அவர்கள் அபகரிக்கிறார்கள். சீத்தாலட்சுமி மற்றும் பெருமாளம்மாள் பெயரில் உள்ள ஆவணங்களை ரத்து செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இப்போது தான் எனக்கு தெரியவந்துள்ளது. இனிமேல் தான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். ஏற்கனவே பதிவுதுறையில் 2011ம் ஆண்டு சீத்தாலட்சுமி மற்றும் பெருமாளம்மாள் பெயரில் உள்ள ஆவணங்களை ரத்து செய்ய மனு கொடுத்து அந்த மனு 2016ம் ஆண்டு முடித்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அது வேறு சொத்திற்கானது. தாவா சொத்திற்கு நவம்பர் 2021ல் மனு கொடுத்து 30 மார்ச் 2022ல் நீதிமன்றம் போய் பரிகாரம் கேட்டு கொள்ளுங்கள் என்று முடித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் பதிவுதுறைக்கு 2011ல் கொடுத்து 2016ல் முடித்து வைத்தற்கான ஆவணம் என்றால் சரிதான். ஆனால் அது வேறு சொத்திற்கானது ஆகும். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.3 ஆகும். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் ஆவண எண்கள்.2706/1999, 1926/2005 என்று உள்ளது. தாவா சொத்திற்கான சர்வே எண்கள் என்றால் சரிதான். ஆனால் அந்த மனுவில் என்ன முடிவு காணப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த ஆவணம் மூலமாக நீதிமன்றம் மூலமாக பரிகாரம் தேடிக் கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டது என்றால் மார்ச் 30, 2022ல் தான் அவ்வாறு உத்தரவிடப்பட்டது. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், தாவா சொத்து விபரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல. நீதிமன்ற தீர்ப்பாணை, பட்டா, ரசீது ஆகியவை என் பெயரில் உள்ளது. பிரதிவாதியை வீண் அலைக்கழிப்பு செய்வதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்றாலும், அவர் அந்த சொத்தை என்னிடம் வாடகைக்கு பெறவில்லை என்றாலும், அவர் எனக்கு எந்த வாடகை பணமோ, வாடகை பாக்கியோ தரவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா

சொத்து என் பெயரில் இல்லாத காரணத்தினால் நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.